இரண்டு மூன்று டிராக்டர்களை வாங்கிக் கொடுத்து அந்த விவசாயப் பகுதி மக்கள் பயனடைய அரசின் செயற் குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூர் மட்டுமல்ல. தமிழகத்தின் வேளாண்மைப் பெருங்குடி மக்கள் நலன் பெறு கிற வகையில் இந்த அரசு அனைத்து திட்டங்களையும் செயல் படுத்திக்கொண்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 211, திரு. வே. பெரியசாமி மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

211—

அந்தியூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*809. திரு. வே. பெரியசாமி :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) பெரியார் மாவட்டம் அந்தியூர் தொகுதியில், அந்தியூர் பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகட்ட முன்பணம் மக்களிடமிருந்து வசூல் செய்தபிறகும் வீடுகள் கட்டப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்குத் தேவையான குறைந்த அளவு விண்ணப்பங்கள் கூட பெறப்படாததாலும், பொரு ளாதார அடிப்படையில், செயலாக்க இயலாமையாலும், திட்டம் கைவிடப்பட்டது.

முற்பகல் 10-10

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அந்தியூர் தொகுதியில் உள்ள அந்தியூர் நகரப் பேரூராட்சி மன்றம் 20 ஆயிரம் மக்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கே ஏராளமான அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. ஏராளமான நெச

வாளப் பெருங்குடி மக்கள் இருக்கிறார்கள். அந்த நெச வாளப் பெருங்குடி மக்கள் எல்லாம் என்னிடத்திலே வந்து, ஐயா "நீரு ஒகி தொட்டம்மா, சீப் மின்ஸ்ட்டருனி அவர்கடா நம்க்கோ மனபேக்கு என்று கன்னடத்திலே மாடபேக்கு......". எனவே நீங்கள் எல்லாம் கருணை உள்ளம் கொண்டு காருண்ய உள்ளம் கொண்ட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஒப்புதல் பெற்று தயவுசெய்து இவ்வாண்டு இல்லை என்று சொன்னாலும் வரும் ஆண்டிலாவது இங்கே வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சுமார் 101 நகரப் பகுதிகள் வீட்டு வசதி மேற்கொள்வதற்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையிலே இந்த 101 நகரங்களிலே தேவை கருதி மேற்கொள்ளப்பட்டது. தேவை என்ற அடிப்படையிலே மேற்கொள்ளப்பட்டதில் சுமார் 77 நகரங்களில் மட்டுமே வீடு கட்டும் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டது. மீதம் உள்ள 24 நகரங் களில் போதிய தேவை இன்மை காரணமாக, குறை வான தேவை கணிப்பு காரணமாக அங்கே வீடு கட்டும் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இவற்றில் பெரி யார் மாவட்டத்திலுள்ள அந்தியூர் நகரமும் அடங்குவ தாகும். அங்கே 'டிமாண்ட் லேது' என்ற காரணத்தினால் இந்தத் திட்டம் கைவிடப் பட்டிருக்கிறது. தேவை கருதி அரசு மீண்டும் உறுதியாக எடுத்துக் கொள்ளும். அந்த அடிப்படையிலே தேவை இருக்குமாயின் பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறு இருக்குமாயின் இந்தத் திட்டம் ஆய் வுக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களும், உறுப்பினர் அவர்களும் அவர்களுக்குத் தெரிந்த மொழியில் பேசிக் கொண்டிருக்கின்றார்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் தெரிவது போல அதை மொழி பெயர்த்து விட்டார்களானால் நல்லது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னடமும் களிதெலுங்கும், கவின் மலையாளமும் துளுவும்" தமிழிலே இருந்து பிறந்தது என்று நாடகப் பேராசிரியர் மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கின்ற காரணத்தினால் அந்தக் கன்னட பகுதியிலே உள்ள மக்கள் தமிழை நன் றாக அறிந்திருப்பதாலும் அந்த மக்களுடைய வேண்டுகோளை

உங்கள் மத்தியிலே வைக்கிறேன். அருள் கூர்ந்து இவ் வாண்டு இல்லை என்றாலும் வரும் ஆண்டிலாவது செய் வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 212, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

212—

ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை.

*3405 திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமது அன்றாடப் பணிகளைக் கூட செய்ய இயலாத ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கும் 41 ஊன முற்றோருக்கு வாழ்வளிக்க ஊனமுற்றோர் பள்ளியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை. மற்ற உதவிகள் வழங்கப்படு கின்றன.

(ஆ) இந்த 41 பேர் பற்றி விவரம் தந்தால் ஆவன செய் யப்படும்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தமிழக அரசினுடைய கடந்த கால ஆட்சியி னுடைய ஊன நிலையை மாற்றி ஒரு உன்னத நிலைக்குத் தமி ழக அரசையே உருவாக்கி அமைத்திருக்கும் கலி உலக சிற்பி, நான் வணங்கும் நடமாடும் பேசும் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பெற்ற குழந்தை களுடைய உடல் ஊனத்தைப் பார்த்து உள்ளம் ஊனம்பட்ட